சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No.139/2024

2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 28ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் திரு. மேட வெங்கட கார்த்திகேஸ்வர்<br>த/பெ. மேட வெங்கட ராமகிருஷ்ணடு | நாள்.28.01.2025 |
| வயது. 39 | வட்டம் |
| கிராமம். மதுராந்தகம் | மாவட்டம். |

**வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்**

1. நான் வழக்கில் வாதி வங்கியில் கிளை மேலாளராக பணி புரிந்து வருகிறேன். நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். 01.02.2018 தேதியில் பிரதிவாதி எங்கள் வங்கிக்கு அளித்த கடன் விண்ணப்பம் அசல் **வா.த.சா.ஆ.**1. 06.02.2018 தேதியில் எங்கள் வங்கிக்கு அளித்த கொதுவை ஒப்பந்தம் அசல் **வா.த.சா.ஆ.2.** 28.01.2021 மற்றும் 11.01.2024 தேதிகளில் பிரதிவாதி எங்கள் வங்கிக்கு அளித்த உயிர்ப்புக் கடிதம் அசல் **வா.த.சா.ஆ.3 மற்றும் 4.** 25.03.2024 தேதியில் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கு அறிவிப்பின் அலுவலக நகல் **வா.த.சா.ஆ.5.** அறிவிப்பு சார்பு செய்ததற்கான அஞ்சல் துறை கடிதம் **வா.த.சா.ஆ.**6. 20.03.2024 தேதி வரைக்கான வங்கிக் கணக்குகள் அசல் **வா.த.சா.ஆ.7.** தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை, தோன்றாத் தரப்பினர்